
மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை

# சூழல் சுடர்

ஆனி 1995 ❀ ''மன்று'', 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. ❀ 30




மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் ''சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்'' இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

மட்டமான ஏரியிலே
பட்டு இறாலும் ஒழிந்தோட
கூட்டமாக பறவைகளும்
கூடிப்பாடி மறைந்துவாழ
ஓடிவரும் புள்ளிமானும்
ஓரமாகப் பதுங்கிநிற்க
வழி சமைத்துக் கொடுத்த
னையோ
வண்ண வண்ணக் கிளைக
ளையே

ஆசிரியர் குழு

திரு. கா. நட்ராஜா — செல்வி கு. ஐசிந்தா
திருமதி வி. இராமச்சந்திரா — திருமதி யோ. புவனேந்திரன்
திரு. யோ. இ. கிறிஸ்ரோபர் — செல்வி க. லீலா



## உள்ளடக்கம்

உழவன் இன்று உலகறிந்த பிச்சைக்காரன் — 2
திரு. யோ. இ. கிறிஸ்ரோபர்
மழலைகள் மனம் மலர — 2
கலாநிதி க. கனகராசா
வாழ்வளிக்கும் மண்வளத்தை சிதைக்காதே .. — 3
செல்வன். வை. வரணிதரன்
பழங்களும் பயன்களும் — 3
திருமதி யோ. புவனேந்திரன்
மண்புழுக்கள் மூலம் கூட்டுப்பசளை .. — 4
திரு. வ. இரமலிங்கம்
கண்காட்சி பற்றிய ஓர் கண்ணோட்டம் — 5
திருமதி நி. ஜெயராஜா
கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே — 6
போட்டி இல 10
கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே
பங்குனி மாத கேள்விக்கான விடைகள் — 6
வளங்கள் சில சிந்தனைகள் — 7
திரு. ஆ. கதிரமலைநாதன்
இம்மாத செய்திச் சுடர் — 8

### பங்குனி மாதப் போட்டி முடிவுகள்

1ம் இடம் செல்வன் கோ. இராஜகோபால்
ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம்
தாழங்குடா - 02
ஆரையம்பதி.

வேறு எவரும் சரியான விடையை எழுதவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவன் இன்று உலகறிந்த பிச்சைக்காரன்

யோ. இ. கிறிஸ்ரோபர்

விவசாயி நாட்டின் முதுகெலும்பு, விவசாயம் ஊக்குவிக்கப்படவேண்டும் என்ற கோசங்கள் அரசியல்இலாபத்திற்காகப்பேசப்படுகின்றது. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தளவில் விவசாயி ஒரு பிச்சைக்காரன். இன்று காலை முதியவர் என்னைக் கண்டதும் கையை நீட்டினார். அவருடன் சிறிது நேரம் அளவளாவிய பொழுது கிடைத்த தகவல் சிறந்ததாக இருக்கவில்லை.

நான் ஓர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். சிறுவயதிலிருந்து வயல் செய்வதுடன் வேறு பயிரும் செய்து வந்தேன். எங்கள் உணவிற்கு மேலதிகமானதை விற்று எமது மறு தேவைகளைப் பூர்த்தி செய்வோம். என்றும் விளைச்சல் போதுமாக இருந்தது. கால்நடைகள் இருந்தன. அவற்றின் எருவுடன் இரசாயனப் பசளையும் இட்டே செய்தேன். ஆனால் சில வருடங்களாகக் கடையில் வாங்கும் பசளை மட்டும் பாவிப்பேன், வேலை குறைவு. ஆனால் ஓரிரண்டு வருடங்களின் பின் ஒரே நட்டம் பூச்சிக்குக் கூட, மருந்தடித்தாலும் பிரயோசனம் இல்லை என்றார்.

தற்போது ஏன் பிச்சை எடுக்கிறீர்கள் என்று கேட்ட பொழுது...வயல் பக்கம் போக முடியாது ஊரில் இருக்கும் பூமி வெம்பு மண். ஒன்றும் செய்ய முடியாது, பிச்சை எடுக்கின்றேன் என்று கூறினார்.

விவசாயிக்கு இந்நிலை ஏற்பட வேண்டுமா?

தொழில் தெரிந்தவர்கள், காலாகாலமாகத் தொழில் செய்தவர்கள் இன்று சமுகத்தில் பின் தள்ளப்பட்டு சமுகச் சூழலில் பாரமாக இருக்கின்றார்கள். விவசாயப் பூமிகள் பாழடைவது மட்டுமல்ல விவசாயிகளும் பாழாகப் போகின்றார்கள்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்''

என்று திருவள்ளுவர் மேன்மைப்படுத்திய உழவன் இன்று தொழுதுண்கின்றான்.

இந்நேரத்தில், விவசாயத் திணைக்களம் உற்சாகத்துடன், மாவட்டத்தில் தரிசாக உள்ள வெம்பு மணல் பூமிகளை மக்கள் பயிர் செய்து பசுந்தரையாக்க ஊக்குவிக்கும் முயற்சியில் ஈடுபடுவது சாலச் சிறந்தது

''ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு.''

எனவே, எமது மறைமாவட்ட தேவையைப் பூர்த்தி செய்ய ஊர் மனைகளில் இருக்கும் எவ்வகை வெற்று நிலமும் பயிர் செய்யப்பட்டுப் பொன் கொழிக்கும் பூமியாக மாற்றப்பட வேண்டும். இதற்குரிய சகல வளங்களும் எம்மிடம் உண்டு. ஆனால், பாவிக்கப்படுவதில்லை.

நிலத்தை வளமாக்கிப் பயிர் செய்வதை விட்டு அந் நிலத்தின் மண்ணை விற்று ஏப்பம் விடுகின்றார்கள். நிலத்தை வளமாக்கும் குப்பை கூழங்கள் எரித்தழிக்கப்படுகின்றன. காடுகள் வெட்டி களனிகளாக்குவோம் என்று ஒருகாலம் நாம் போட்ட சத்தம் இனி, தரிசு நிலங்களைப் பசுந்தரைகளாக மாற்றுவோம் என்று போடுவோம்.

''வெள்ளத்து அனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத்து அனையது உயர்வு''

தொகுப்பு: கலாநிதி க. கனகராசா
ஆக்கம்: அம்புலிமாமா

## மழலைகள் மனம் மலர

சில வருடங்களுக்கு முன் முப்பது நாடுகளிலிருந்து சுற்றுப்புறச் சூழல் போட்டியில் கலந்து கொள்ள வந்தர்கள் பல படங்களையும் மாதிரிகளையும் கொண்டு வந்திருந்தனர். அத் தேர்வின்போது முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்ட சுற்றுப்புறச் சூழல் அண்ணல் சுந்தர்லால் பகுகுணா, அவர்களிடம் 'உங்களில எத்தனை பேர் செடிகளை நட்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார். ஒருவர் கூட தாம் நட்டதாகக் கூறிக் கை உயர்த்தவில்லை.

இப்போது பல பள்ளிகள் மரம் வளர்ப்பதன் முக்கியத்தைக் கூறி மாணவர்களைத் தம் பள்ளிகளில் செடிகளை நடச்செய்கின்றன. அவற்றைத் தினமும் அவர்களே பார்த்து வளர்த்து வரவும் கூறுகின்றன. ஒரிஸ்ஸாவில் ஒரு ஆசிரியர் மாணவியிடம் அவள் வளர்க்கும் செடியருகே உட்கார்ந்து பாடச் சொன்னாராம். அச்செடி நன்கு வளர்ந்ததாம். மற்றொரு மாணவனிடம் அவனது செடியருகே உட்கார்ந்து கத்தச் சொன்னாராம். அது நன்கு வளரவில்லையாம்.

இதிலிருந்து பள்ளிக் குழந்தைகள் செடிகளும் மனிதர்களைப் போல உணர்ச்சியுள்ளவை எனத் தெரிந்து கொண்டார்கள், இதுபோலக் குழந்தைகளைச் செடிகளை வளர்க்கச் செய்து அவற்றைப் பாதுகாத்து சுற்றுப்புறச் சூழலை வளம்பெறச் செய்யும் வண்ணம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## வாழ்வழிக்கும் மண்வளத்தை சிதைக்காதே மானுடனே!

ஆக்கம்: செல்வன். வை. வரணிதரன், ஆண்டு 12 (Blo) மட்/சிவானந்தா வித்தியாலயம்

நாடாளு வேந்தரும் நல்லோரும் நம்மிறையும்
கோடான கோடிக்குடிகளும் கோடி ஆண்டுகளாய்
சீராகப் போற்றி செழிப்பாய் வைத்த மண்வளத்தை
ஓராண்டில் அழித்தொழிக்கும் மானிடனே சொல்லக்கேள்!
வருமலையாய் கருநிலமாய் அவதரித்த நிலமகளான்
எரிமலையால் இடியொலியால் பெருமழையால் பிளவுண்டு
அரும் ''இலைக்கன்'' அமிலமழைச் சிற்பிகள் தான் வடிவமைத்த
ஒருமகளாம் மண்வளத்தை மாய்த்திடாதே மானுடமே!
மண்வளம்தான் மழுங்கிவிட்டால் மரவளமோ செழிக்காது!
மரவளநாண் அறுந்துவிட்டால் மனிதவீணை ஒலிக்காது!
பன்வழியில் பாதுகாத்தல் மண்வளமோ மரிக்காது!
மண்வளம்தான் செழித்துவிட்டால் வறுமைத்தீ வதைக்காது!
மஞ்சுமகள் புனல்சொரிந்தால் மண்மகள் செழித்துவிட்டால்
துஞ்சுபவர் துயில்நீக்கித் துணிவுடன் ஏரெடுத்தால்
பஞ்சமோ! பட்டினியோ, பசிப்புயலோ! மனுவைக்கொல்
கஞ்சனோ! அவனெங்கே? செல்வத்தீ கருக்கிவிடும்.
நாட்டாண்மை புரிந்துநின்று வேந்தர்தம் செல்வமான
காட்டாற்று வெள்ளமே! கரைக்காதே சேதனத்தை!
மேட்டுநில மேல்மண்ணை, சேதனத்தை, சேர்வைகளை,
ஊற்றெடுக்கும் கனியுப்பை உவரியிலே கொட்டாதே!
ஓடுபுனல் கரைத்த உறுகாற்று மண்ணிரிக்க
போடுமுரம் அமிலமாய் நுண்ணியிரங்கி அழிக்க
காடுமரம் தறிக்க களனியில் நீர்குறைந்தால்
காடுபயிர் களனியின் கானல்நீர்தான் காணுமம்மா!
மரங்கள்காலும் இலைகுழையை உரங்களாக்கும் நைற்றோபக்கர்,
பரந்தவாயு நைற்றஜனை பதித்துவைக்கும் அசற்றோபகர்
உரங்களென்று நாங்களிட்ட உப்பினால் உறங்கிவிட்டால்
வரங்களென்ற மண்வளங்கள் பலன்தராமல் பறந்துபோமே!
விதியோட்டின் எழுத்தாணி உழவன்தன் உறவாளி
புதிதான வளியோட்டம் உருவாக்கும் மண்புழுக்கள்
சதியாலே பயிர்கொல்லும் புழுபூச்சிக் கொல்லிகளால்
பலியானால் புதிதாக பயிரென்ன வளர்ந்திடுமா...?
பெருகிவரும் மானுடர்க்கு பெருமுணவு அளிக்கவென
அருகிவரும் வனவளத்தை அரிந்து கருக்கிவிட்டால்
உருகுவதால் பனிப்பாறை உயர்ந்துவிட்டால் உவர்மட்டம்
அருகிவரும் நிலத்திலினி கடல்மீன்தான் இரைதேடும்!
போடுப் போட்டு உரத்தால் புளியாகிவிடாமல்
கூட்டிக் குப்பையை கூட்டெருவாக்கி இட்டு
மாட்டெருவும் டொலமைற்றும் மண்ணிற்கு சேதனமும்
போட்டுப் பயிர்நாட்டி பெருவிளைவு காண்போம்!
மறுசிரமைத்து, மூடுபயிர் வளர்த்து, மிருகவுரமளித்து,
உறுவேலியமைத்து, பெருவனம்வளர்த்து, உயிர்க்கொல்லி குறைத்து.
வருநீரை மறித்து, அளவாகவிடுத்து, அரிப்பைத் தடுத்து,
பெருவிளைவெடுத்து, புதுயுகம் படைத்து, பெருமுணவளிப்போம்;

---

## பழங்களும் பயன்களும்

திருமதி. யோ. புவனேந்திரன்

இலந்தைப் பழமிருக்கு
இலங்கையிலே நிறைந்திருக்கு
பின்நீரும் உண்டுகொண்டால்
பித்தமூச்சை நீக்கிடுமே!

பலாவின் பழமிருக்கு
பல்சுவையும் நிறைந்திருக்கு
தின்னுகின்ற மனிதர்க்கெல்லாம்
தீருமாமே நோயுமே!

புவியம் பழமிருக்கு
பூத்துஎங்கும் நிறைந்திருக்கு
வாங்கியதைஉண்டுகொண்டால்
வாந்தியதும் விலகிடுமே!

தேற்றாப் பழமிருக்கு
தேடாமல் நிறைந்திருக்கு
இவைபறித்து நீஉண்டால்
இரைப்பு, மனக்கட்டுபோமே!

பாலைப் பழமிருக்கு - எம்
ப லையூற்றில் நிறைந்திருக்கு
வெகுவாய் எடுத்துவந்தால்
வெப்பந்தான் தணிந்திடுதே!

கொய்யாப் பழமிருக்கு
கொய்யாமல் இருப்பதென்னே
மணம்பரப்பும் இதையுண்டால்
மலங்கழியும் இலகுவில்தானே!

எலுமிச்சம் பழமிருக்கு
ஏனின்னும் பயமுனக்கு?
காதுநோய்' வாந்தியெல்லாம்
காற்றுடனே போயிடுமே!

மாதுளம் பழமிருக்கு
மாதுவின்உளம் நிறைந்திருக்கு
கற்கண்டும் சேர்த்துக்கொண்டால்
குளிர்ந்திடுமே சரீரமதே!

காரைப் பழமிருக்கு - எம்
காரைதீவில் நிறைந்திருக்கு
சீமான் நீயுமுண்டால்
சிதரத்தக் கடுப்புநீங்குமே!

நெல்லிக் கனியிருக்கு
நேசமுள்ள பழமிருக்கு
அதியமான் ஔவைக்கு
அளித்துநின்றார் வாழ்வதற்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

ஆதாரம்: Organic Matters, December 1994 டாக்டர் சுல்தான் இஸ்மாயில்

தொகுப்பு: திரு. வ. இராமலிங்கம்

மண்புழுக்கள் ''விவசாயிகளின் தோழன்'' என அழைக்கப்படுகின்றன. ஏனெனில், அவை விவசாயத்தில், முக்கிய செயலாற்றும் பங்கினை வகிக்கின்றன. அவை மண்ணைத் துளைத்துக் கொண்டு செல்லும்போது மண்ணில் உள்ள அங்கிகளின் சிதைவுகளை உணவாக உட்கொள்கின்றன. உயிரங்கிகளின் சிதைவுகளை சிதைவுறச் செய்வதினால் மண் வளமாக்கப்படுகிறது. வளி ஊடுருவல் மண்ணிற்கு நீரைச் சேமிக்கும் தன்மையைப் பெருக்குகின்றது. மண்புழுவைக் கொண்டு உயிரங்கிகளின் கழிவுகளைச் சிதைவடையச் செய்வதே Vermi Composting என அழைக்கப்படுகின்றது.

600 மில்லியன் ஆண்டுகளாக இம் மண்புழுக்கள் மண்ணை வளமாக்கும் பணியைச் செய்து கொண்டு வருவதாக அறியப்படுகின்றது. மண்ணில் வாழும் உயிரினங்கள் மண்ணிற்கு மிக முக்கியமானவையாகும். அவைதான் மண்ணை உயிருள்ளதாக்குகின்றது. (உயிருள்ள மண் என்றால் வளமான மண்). இவைதான் மண்ணிற்குரிய மணத்தைக் கொடுக்கின்றது. மண்ணில் வாழும் பிராணிகள் அற்ற மண் உயிரற்ற மண்ணாகக் கருதப்படுகின்றது. இவ்உயிரினங்களின் உணவு கூடுதலாகத் தாவரங்களினாலேயே கிடைக்கின்றது. மண்ணில் வாழும் நுண்ணங்கிகள், பற்றீரியாக்கள், பங்கசுக்கள் ஆகியவற்றின் இறந்த சடலங்களையும் மற்றைய சிதைவுகளையும் மண்புழுக்கள் உணவாக உட்கொள்வதனால், அவை அகற்றுகின்ற கழிவுகள் கூடிய மண் போஷணையுடைய பதார்த்தங்களாகக் காணப்படுகின்றன. ஆகவே, நாம் இம் மண்புழுக்களைக் கொண்டு தரமான கூட்டுப் பசளையைத் தயாரிக்கலாம்.

தயாரிக்கும் முறை:

தோட்டத்திலோ அல்லது வீட்டுப் பின்புறத்திலோ தேவையான அளவிலான கூட்டுப் பசளைக் குழியைத் தயாரிக்கலாம். ஆனால், 2m × 1m × 1m அளவிலான குழி வசதியானதாக அமையும். குழியின் அடியில் 15 தொடக்கம் 20cm தடிப்பான களிமண்படையை அமைக்கவும். அதற்கு மேலாக 5cm அளவிலான தடிப்பிற்கு மணலும் செங்கற் துண்டுகளும் பரவவும். அதனுள் மண்புழுக்களை விடவும். மண்புழுக்கள் களிமண்ணைத் தமது வீடாகப் பாவிக்கும். தங்கள் பகுதி மண்ணில் வாழும் மண்புழுக்களையே உபயோகப்படுத்தல் விசேடம். மேல் குறிப்பிட்ட அளவிலான குழிக்கு 100 மண்புழுக்கள் மட்டில் உபயோகிக்கவும், மண்புழுக்களின் படுக்கை அதாவது களிமண் பகுதி ஈரலிப்பாக இருத்தல் அவசியம். ஆனால், நீர் நிரப்பி இருத்தல் கூடாது. இரண்டு குழிகள் அமைத்துக்கொள்ளுதல் வசதியானதாக அமையும்.

திரம்பட கூட்டுப்பசளையை உற்பத்தி செய்வதற்கான கால அட்டவணை:

| நாள் | 1வது குழி | 2வது குழி |
|---|---|---|
| 0 | மண்புழுவைப் படுக்கையில் அறிமுகப்படுத்தல் | ...... |
| 30 | நிரப்ப ஆரம்பித்தல் | |
| 45 | ... .. | மண்புழுவைப் படுக்கையில் அறிமுகப்படுத்தல் |
| 75 | நிரப்புதல் நிறுத்தப்படுதல் வேண்டும் | நிரப்ப ஆரம்பித்தல் |
| 120 | (1) பசளை பாவனைக்கு எடுக்கவும் | ... |
| 125 | மீண்டும் நிரப்பவும் | நிரப்புதலை நிறுத்தல் |
| 165 | ...... | (2)பசளையை பாவனைக்கு எடுக்கவும் |
| 170 | நிறுத்தவும் | மீண்டும் நிரப்பவும் |
| 215 | (3)பசளையை பாவனைக்கு எடுக்கவும் | ... |
| 265 | | (4)பசளையை பாவனைக்கு எடுக்கவும் |

தொடரவும்

பச்சைச் சாணத்தை இடைக்கிடை மண்புழுப் படுக்கையின் மேல் போடவும். அதன்மேல் 5cm அளவிற்கு இலைகுலைகள் அல்லது வைக்கோல் போடவும். அடுத்து 30 நாட்களுக்கு குழி ஈரலிப்பாக இருத்தல் வேண்டும். பறவை, கோழிகளிடமிருந்து காப்பதற்கு பனை அல்லது தென்னை ஓலைகளால் மூடி வைக்கவும். 1வது 30 நாட்களின் பின்னர் உயிரங்கிகளின் கழிவுகள் சமையலறைச் கழிவுகள் 5cm உயரத்திற்கு சேர்க்கலாம். இரண்டு வாரத்திற்கொரு முறை இப்படிச் செய்யலாம். இடைக்கிடை இதனை மண்புழுங்களுக்கு சேதமேற்படா விதத்திலும் புரட்டலாம். மடு நிரம்பும்வரை குப்பைகளைப் போட வேண்டும். மேலும், 30 அல்லது 45 நாட்களுக்கு குழியை ஈரலிப்பாக வைக்கவும். இடைக்கிடை மண்புழு சேதமடையா விதத்தில் புரட்டவும்.

தொடர்ச்சி ..7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுமாநகரில் சுற்றாடல் தினக் கண்காட்சி

## கழிவுப் பொருட்களிலிருந்து பயன்தரும்பொருள் உருவாக்குதல்

### ஓர் கண்ணோட்டம்

திருமதி நிர்மலா ஜெயராஜா (சனசமூக உத்தியோகத்தர்)

மன்று, மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றாடல் பாதுகாப்புகென பல்வேறுவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. உலக சுற்றாடல் தினத்தில் சூழல் பாதுகாப்பு எண்ணக்கருவையும் விழிப்புணர்வையும் மாணவரிடையேயும், பொதுமக்களிடையேயும் பரவச் செய்யும் வண்ணம் ஆண்டு தோறும் வித்தியாசமான நோக்கில் நிகழ்ச்சிகளை முன்வைப்பது அதில் முக்கிய அம்சமாகும். வழமையாக மாவட்ட சூழல் முகவரவையுடன் இணைந்து இவற்றைச் செயற்படுத்தி வருவது வழக்கம். ஆயின் பிரதேசச் செயலகங்கள் தோறும் பிரதேச சுற்றாடல் ஊக்குவிப்புக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, அவற்றுடன் இணைந்த வகையில் இவ்வாண்டு உலக சுற்றாடல் தின நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தி வருகின்றது.

மண்முனை வடக்குப் பிரதேசச் சுற்றாடல் ஊக்குவிப்புக் குழு, பயன்தக்கதானதோர் திட்டத்தை உருவாக்கி செயற்படுத்த வேண்டுமென்று விரும்பி, மன்றுடன் தொடர்பு கொண்டது. இந்த இணைப்பில் உருவாகிய எண்ணக்கரு, கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி பயன்தரு பொருட்களின் ஆக்கங்களுக்கான ஓர் போட்டியும், கண்காட்கியும் அமைப்பது என்பது. அன்றாடம் பெருந்தொகையான கழிவுப் பொருட்கள், அவை மீள்மேற்சிப்படுத்தக் கூடிய நிலையில் இருந்தும் வெளியே வீசப்படுகின்றன. அத்துடன், பிளாஸ்ரிக் பொருட்கள், பாவனையிலுள்ள 'டிஷ்யூ' பைகள் என்பன எமது சூழலை மிகவும் விகாரமாக்கிக் கண்ணுக்கும் மனதுக்கும் நெருடலைத் தந்துகொண்டிருக்கும் அவல நிலையைத் தோற்றுவித்துள்ள தன்மை என்பவற்றைக் கருத்திற் கொண்டு அத்தகைய பொருட்களை மீள்சுழற்சிப்படுத்தி பயன்படத்தக்கதான ஓர் வழி முறையை ஏற்படுத்தவும், கைவினைக் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் இத்திட்டம் வரையப்பட்டு இரண்டு கட்டப் போட்டிகளாக நடாத்துவதெனத் தீர்மானித்து 8-3-95ல் மாவட்டப் பாடசாலைகள் அனைத்துக்கும், கழகங்களுக்கும் விளம்பரமாக அனுப்பப்பட்டன. மேலும், பிரதேசச் செயலகங்கள், கிராம உத்தியோத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஊடாகவும் விளம்பரப்படுத்தப்பட்டன. 'மன்று' நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர்கள் மிகுந்த அக்கரையுடனும், ஊக்கத்துடனும் விளம்பர நடவடிக்கைகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் பயனாக புனித சிசிலியா மகளிர் கல்லூரி, மெதடிஸ்த மத்திய கல்லூரி, புனித மிக்கேல் கல்லூரி, கல்லடி முத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயம், களுதாவளை மகா வித்தியாலயம், பெரிய கல்லாறு மகா வித்தியாலயம், காத்தான்குடி மீராபாலிகா போன்ற பாடசாலைகளிலிருந்தும், 40க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன.

அதனடிப்படையில் மட்/ அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் 3 - 6 - 95ல் கண்காட்சி ஒழுங்குகள் நடைபெற்று 4-6-95ல் கண்காட்சியும், போட்டியும் நடைபெற்றன. கண்காட்சி திரு. அ. கி. பத்மநாதன், மட்/ அரச அதிபர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கண்காட்சிக்கு கொண்டுவரப்பட்ட பொருட்களும், அதன் உருவாக்கங்களும் பிரமிப்பூட்டுவனவாக அமைந்திருந்தன. பாடசாலை மாணவரின் எண்ணக்கருவும், ஆக்கங்களும் பாராட்டத்தக்கனவாக இருந்தன. ரிஷ்யூ பைகள், அழகிய மலர்களாக, மலர் அலங்கரிக்கும் அழகிய பின் தட்டிகளாக (பிரேம்) மலர் அணியின் 'வோ'க்களாக (Bow) உருப்பெற்றிருந்தன. வீசியெறியப்படும் ஐஸ்கிறீம் கோப்கைள் அழகிய மலர்களாக, அங்கர் பால் பக்கெற்றின் உள்ளே உள்ள அலுமினியப் பைகள் சோடனைச் சரங்களாக உறிஞ்சு குழாய்கள் யன்னல் திரையாக, கிழிந்துபோன நுளம்பு வலைகள், உடைந்த காப்புகளும், கதவுச் திரையாக வடிவம் பெற்றிருந்தன. பிளாஸ்ரிக் வெற்றுக் கலன்கள் தபால்பெட்டிகளாக, நூற்கட்டையின் உட்சுருள்கள், விளக்குக்கான (Lamp Shade) மறைப்புக்களாக வடிவமைக்கப்பட்டிருந்தன. பால்மாத் தகரங்கள் உமி அடுப்புக்களாக, உமி பற்பொடியாக, பாவிக்காத பால்மா அட்டைப் பெட்டிகள், நகைப் பெட்டிகளாக குளியலறையில் பொருத்தும் பல பொருட்கள் வைக்கும் தட்டுகளாக (Shelf) மாறியிருந்தன. சிரட்டைகள், சாவி பொருத்தும் இணைப்புகளாகவும், வீசப்படும் ஊசிமருந்தேற்றும் கருவிகள் விளையாட்டு விமானங்களாகவும், தேங்காய்ப்பூ, பல வர்ணக் கோலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிகளாகவும் பொதி செய்யப்பட்டிருந்தன. சுவீப் ரிக்கெட்டுக்கள் மலர்ச்செண்டுகளாக உருமாறியிருந்தன காகிதக்கூழ் உண்டியல், மிருகங்களின் பொம்மைகள், முகமூடிகள் எனப் பல்வேறு பயன் தரு பொருட்களாக வடிவேற்றிருந்தன. பழைய அட்டைப் பெட்டி, ரொபிப் பேப்பர்களின் இணைப்பில் இசைக்கருவியொன்று இசையெழுப்பிக் கொண்டிருந்தது. பழைய இரும்புகளைக் கொண்டு எண்ணெய், பழச்சாறு தயாரிக்கும் இயந்திரமாக உருமாற்றப்பட்டிருந்தமை, பொறியியலாளர்களின் கவனத்தைக் கவர்ந்தது. பனை நாரினால் ஆன விளக்குத் தடுப்புகள், பூக்கள், பாவணைப் பொருட்கள் சோடனைப் பொருட்கள், டைனோசர் ஒன்றும் சத்தமிட்டுக் கொண்டிருந்தது. கூட்டெருவில் ஒரு மிளகாய்க் கன்று; பலரையும் வியப்புக்குள்ளாக்குப் இன்னும் பல்வேறு ஆக்கங்கள் அமைந்திருந்தன.

இம்மாவட்டத்திலேயே தேர்ச்சியும் தகைமையும் உள்ள நிபுணர்கள் நடுவர்களாகக் கடமையாற்றினர். விபரம் வருமாறு: திருமதி. நடேஷ்வரி நவரெட்ணராஜா, மனையியற் பொருளாதார உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம், திரு. நெல்லை நடேஸ், தொடர்பு சாதனத் துறை சார்ந்தவர், திருமதி. ஜனனி தங்கவேல், ஆசிரிய ஆலோசகர், மனையியற்துறை ஆகியோர்கள்.

வெற்றி பெற்றவர்கள் விபரம்:

பாடசாலை மட்டம்:- 1ம் இடம் - செல்வி. க. சினேகப்பிரபா, புனித சிசிலியா மகளிர் கல்லூரி
2ம் இடம் - செல்வன். ரீ. சக்திரமணன், மெதடிஸ்த மத்திய கல்லூரி
3ம் இடம் - செல்வன். ரீ. சக்திகுமார், மெதடிஸ்த மத்திய கல்லூரி

திறந்த போட்டி :- 1ம் இடம் - திருமதி. ஆர். எஸ். சுந்தரலிங்கம், மட்டக்களப்பு.
2ம் இடம் - செல்வன். ரீ. சத்தியலிங்கம்
3ம் இடம் - செல்வன். ரீ. சக்திவேல்

மாலை 3 மணிக்கு பரிசளிப்பு வைபவம் திரு. செ. புண்ணியமூர்த்தி, பிரதேசச் செயலாளர், மண்முனை வடக்கு. திரு. யோ. இ. கிறிஸ்ரோபர், இணைப்பாளர், மன்று ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநகர முதல்வர் திரு. செழியன் ஜே. பேரின்பநாயகம் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், திரு. அ. கி. பத்மநாதன், அரச அதிபர் பிரதம விருந்தினராகவும் கலந்து சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்கினர்.

இன்றைய நிலை காரணமாக கண்காட்சி பி. ப. 4.00 மணிக்கு முடிவுற்றது. பல மாணவர்கள், ஆசிரியர்கள் கண்காட்சியை இன்னுமொரு நாளாவது நீடிக்குமாறு கேட்டபோது தவிர்க்க முடியாத காரணங்களால் மூடவேண்டி ஏற்பட்டது வருந்தத்தக்கதே.

காட்சியில் பிரசன்னமாக்கப்பட்டிருந்த பொருட்களும், எண்ணக்கருவும் கழிவுப் பொருட்களை எத்தகைய வகைகளில் பயன்படுத்தலாம் என்ற வழிகளைப் பிரதிபலித்தன. கண்காட்சிக்காக மட்டும் உருவாக்காமல். நாளாந்த வாழ்க்கையில் ஒவ்வொருவரும் இவ்வழிகளைக் கையாண்டால் எமக்குப் பிரச்சினையாக இருக்கும் குப்பைக்கு நல்ல தீர்வு காணமுடியும்.

## கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே; போட்டி இல. 10

01. சமுத்திர தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
02. உயிர் வாயுவை வேறு எப்பெயரால் அழைப்பர்?
03. முருங்கையின் தாவரவியற் பெயர் என்ன?
04. அழுக்கைப்போக்கும் கீரையென எக் கீரையை அழைப்பர்?
05. நடுகைக்குரிய வாழைக் குட்டிகளைத் தெரிவு செய்யும் போது தெரியப்பட வேண்டிய குட்டியெவை?
06. அனகாயம், ரின்டாட், சந்திகுடு, உல்லால் ஆகிய இனங்களைக் கொண்ட பழமரமெது?
07. அபிசினியா என்பது ஒரு ஆபிரிக்க நாட்டின் பழைய பெயர். அந்நாடு எது?
08. ஓசோன் படல ஓட்டையால் தவளை, தேரை போன்றவை குறைந்து வருவதற்கான சரியான காரணம் என்ன?
09. சூரிய குடும்பத்தில் மிகச் சிறிய கோள் எது?
10. முதன்முதல் பயன்படுத்தப்பட்ட இயந்திரம் எது?

## கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே; பங்குனி மாத கேள்விகளுக்கான விடைகள்

01. ஆம்
02. அக்கிராந்தஸ்
03. மண்புழுவின் எச்சம் அதற்கு நஞ்சாக இருப்பதால்
04. புளியந்தீவு
05. 20mg
06. நன்னீர் மீனினம்
07. 6232.7 ச. கி. மீ.
08. கைகளைக் கழுவ வேண்டும்.
09. புத்தளம்
10. கொயட்டீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுச் சுடர்

## வளங்கள் சில சிந்தனைகள்

திரு. ஆ. கதிரமலைநாதன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்

சென்ற இதழ்த் தொடர்சி...

**அவசியத் தேவை**

இயந்திர பாவனை அதிகரிக்கப்பட்டதுடன் உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரிக்கவே, வளங்களைப் பயன்படுத்தும் வேகமும் அதற்கேற்றவாறு கூடிச் சென்று விட்டது.

மறுபுறம் அபரிதமான சனத்தொகைப் பெருக்கமும் தனது தேவைக்கேற்றவாறு வளங்களை நுகரும்போக்கில் அதிகரிப்பும் காணப்படுகிறது.

எனவே, இதனை ஈடு செய்வதற்காகப் புதிய புதிய வழிவகைகளைக் கைக்கொண்டு இருந்த வளங்களையும் தீர்த்துவிடும் நிலைக்கு வந்தாகி விட்டது. அந்த எல்லையையும் கடப்பதற்கு நீண்ட காலம் செல்லாது.

**புதிய வளங்கள்**

இதன் காரணத்தினால் தொடர்ந்து பாரம் பரியமான வளங்களிற் தங்கியிருப்பதனைக் கூடிய வரை தவிர்த்து, இதுவரை பயன்படுத்தாத புதிய வளங்களின் பக்கம் விஞ்ஞானிகளின் கவனம் திரும்பியுள்ளது.

இன்றைய நிலையில் அவர்கள் சூரிய ஒளியிலிருந்தும், கடல் அலையிலிருந்து, குப்பை கூழங்களை உக்கச் செய்தும் மின்சாரம் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளைக் கண்டறிந்துள்ளனர்.

சூரிய ஒளியை மட்டும் பயன்படுத்தி ஓடக் கூடிய சிறிய கார்கள் அமெரிக்காவில் வடிவமைக்கப்பட்டு, புழக்கத்திற்கு வந்து விட்டன. அங்கு கோதுமைத் தாணியத்திலிருந்து எரிசக்தியைப் பெற்றுக் கொள்ளும் ஆய்வு வேலைகளும் முடிவயும் நிலைக்கு வந்துள்ளன.

பண்ணைகளில் வளர்க்கும் கால் நடைகளின் சிறுநீர், மலம் போன்ற கழிவுகளிலிருந்து உயிரியல் வாயுவினை உற்பத்தி செய்து, அச் சக்தியைத் தமது பல்வேறு இல்லத் தேவைகளுக்கும் பயன் படுத்தும் முறை இன்று உலகெங்கிலும் வழமையாகி விட்டது.

ஜப்பானில் அரிசித் தானியத்திலிருந்து சவர்க்காரம், ஷாம்பூ போன்ற அழுக்ககற்றும் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

**செயற்கையாக**

ஒரு காலத்தில் உணவென்றால், அது இயற்கையிலிருந்து பெறப்பட வேண்டுமென்றே நம்பப்பட்டது. இன்று, செயற்கையான முறையில் பானங்கள், சிற்றுண்டி வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உடை தயாரிக்க வேண்டுமாயின் பஞ்சு, பட்டு என்பன கட்டாயம் வேண்டுமென்றிருந்த நிலைமை மாறி இன்று சிந்தெட்டிக், நைலோன் போன்ற இழைகளைப் பயன்படுத்தி செய்யப்பட்ட உடுதுணிகள் சந்தையில் மலிவாகக் கிடைக்கின்றன.

இயற்கை முத்து, இயற்கை வைரம், சுத்தத் தங்கம் என்பவற்றைப் பயன்படுத்திச் செய்யும் ஆபரணங்களின் இடத்தை இன்று செயற்கை முத்து செயற்கை வைரம், நிக்கல் என்பன தமதாக்கிக் கொண்டு விட்டன.

வழமையாகப் பயன்படுத்தப்படும் பாத்திரங்களைச் செய்வதற்கு செம்பு, பித்தளை, வெண்கலம் போன்ற உலோகங்கள் தான் தேவை என்ற நிலைமை மாறி, இன்று 'பிளாஸ்டிக்' என்ற செயற்கைப் பொருள் இவ் வேலையைச் சிறப்பாக செய்து கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி மனித வளம் என்பது வற்றாதது. எந்த இக்கட்டான நிலையிலும் புதிய வழிவகைகளைக் கண்டு பிடிக்கும் ஆற்றல் அதற்கு மட்டுமே உள்ள இயற்கைக் குணம். எனவேதான், எதிர்காலத்தில் இதுவரையும் ஒருவரினால் நினைத்தும் பார்த்திருக்க முடியாத வற்றையும் வளங்களாகப் பயன்படுத்தலாம் என நம்பிக்கை கொள்ள முடியும்.

**மண்புழுக்கள்** 4ம் பக்கத் தொடர்

பசளை தயாரானதும் 3 அல்லது 4 நாட்களுக்கு நீர் ஊற்றாமல் காயவிடவும். புழுக்கள் படுக்கைக்குச் சென்றுவிடும். படுக்கை சேதமடையா விதத்தில் பசளையை எடுக்கவும். காற்றில் உலர விட்டு 2.5 அளவிளான அரிதட்டில் அரித்து பக்கட் செய்து வைக்கவும்.

1 - 10 கிலோ மண் கொள்ளும் பூச்சாடிகளுக்கு 100 கிராம் உரம் போதும். மரத்திற்கு 1 - 10 கிலோ உரமும், 1 ஏக்கருக்கு 2000 கிலோகிராம் உரமும் போடலாம். உரம் போடும் போது மண் ஈரலிப்பாக இருத்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

P.W.R.D.F

- ~~எஸ். எல். சீ. டீ. எப்~~. பிரதிநிதி 4 - 6 - 95 அன்று மண்முனைப்பற்றில் நடைபெற்ற உலக சூழல் தின நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதுடன், மரக்கன்றுகள் நாட்டப்பட்ட இடங்களையும் பார்வையிட்டார்.
- மண்முனை வடக்கில் உலக சூழல் தினத்தை முன்னிட்டு 5 - 6 - 95 அன்று கழிவுப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்களின் கண்காட்சியும், போட்டிகளும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்றன.
- 4 - 6 – 95 அன்று உலக சூழல் தினத்தை முன்னிட்டு மண்முனைப்பற்றில் சிறு கருத்தரங்கும், மரநடுகையும் மேற்கொள்ளப்பட்டது.
- 12 - 6 - 95 அன்று போரதீவுப்பற்றில் உலக சூழல் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கும், தனியாருக்கும் நாடகம், பேச்சு, வில்லிசை, கட்டுரைப் போட்டிகளும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.
- 24 - 6 - 95 அன்று சூழல் மன்றப் பொதுக் கூட்டம் மன்று கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
- சந்திவெளி, ஏறாவூர், கூழாவடி, காத்தான்குடி ஆகிய இடங்களில் சூழல் மன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.
- வேப்பம் விதைகளை நாம் கொள்வனவு செய்யவுள்ளோம். சேகரித்துத் தரமுடிந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
- கீழே தரப்பட்டுள்ள விலைப்படி, குறிப்பிட்ட கழிவுக் கடதாசிகளை சேகரித்து வாழைச்சேனை கடதாசி ஆலைக்குக் கொடுத்தால் அதை அவர்கள் கொள்வனவு செய்வார்கள். எனவே, சூழலை மாசுபடுத்தும் இக்கழிவுகளைக் கொடுத்துப் பயனடையுங்கள். ஒரு மெற்றிக் தொன்னின் விலை,

| | | | |
|---|---|---|---|
| தரம் | – I | – அச்சிடப்படாத வெட்டுத் துண்டுகள் (Unprinted off Cuts) | – ரூ. 5,000 |
| தரம் | – II-A | – புதிய வளைவான பக்க வெட்டுத் துண்டுகள் (New Corrugated Trimmings) | – ரூ. 2,250 |
| தரம் | – II-B | – எழுத்துக் கொப்பி பக்க வெட்டுத் துண்டுகள் (Exercise Book Trimmings) | – ரூ. 2,250 |
| தரம் | – II-C | – மனிலாத் தாள்களும், பெட்டிகள் தயாரிக்கும் மட்டைகளும் (Manilla and Box Board) | – ரூ. 2,000 |
| தரம் | – II-D | – பழைய வளைவான அட்டைப் பெட்டிகள் (Old Corrugated Cartons) | – ரூ. 2,000 |
| தரம் | – III | – கலந்த கழிவுக் கடதாசிகள் (Mixed Waste Paper - Book Magazines, Files. etc) | – ரூ. 1,250 |
| கிராபட் | | – வெற்று சீமெந்துப் பைகள் (Empty Cement Bags) | – ரூ. 5,000 |

- மாணவ சூழலணிக்கான இலச்சினை தயாரிக்கும் போட்டியில் பரிசு பெறிறோர் விபரம்:

1ம் இடம் – திரு. கே. எஸ். பவன், முகத்துவாரம், மட்டக்களப்பு.
2ம் இடம் – செல்வன், ஸ்ரீ. சஞ்சிவ், சின்ன உப்போடை, மட்டக்களப்பு.
3ம் இடம் – செல்வன். து. நகுலேஸ்வரன், சந்திவெளி.

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

PRINTED MATTER

"மன்று"
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களறிபு.

IN24. MR. K. SANMUGAM
THEACHER
NADUVIL THAMBI VEETHY
VANTHARUMOOLAI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org